
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2010 ஓகஸ்ட்

வினாத்தாள் I


45 நிமிடம்

❖ ஒவ்வொரு ● இற்கும் எதிரே உள்ள அறிவுறுத்தலுக்கேற்பக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

● பக்கத்தில் உள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.


1. 

(1) (2) (3)


2. 

(1) (2) (3)

● ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அமைப்பைத் தெரிவு செய்க.

3. 

(1) (2) (3)

4. 

(1) (2) (3)

● ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

5.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| மருத்துவர்<br>தாதி<br>நோயாளி | அதிபர்<br>ஆசிரியர்<br>மாணவர் | மீனவர்<br>கடல்<br>கடை |

6.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| இரக்கம்<br>பாசம்<br>அன்பு | அச்சம்<br>மகிழ்ச்சி<br>உணர்ச்சி | முயற்சி<br>ஊக்கம்<br>வெற்றி |

more Past papers at www.Edukinniya.lk

- தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சோலை எங்கும் அதிகாலையில் - வெண்ணிறப் பூக்கள் பூத்துக் குலுங்கி
இளங்காற்றில் அசையும் காட்சியோ - அழகு
வெண்ணிறமாக மின்னி மின்னி - எழுத்தறியச் செல்லும் பாப்பாக்கள்
அசைந்தாடும் மலர்களை விட - அழகானவர்களல்லவா!

www.Edukinniya.lk

7. இக்கவிதை கூறுவது
   (1) சோலை எங்கனும் மலர்ந்திருக்கும் மலர்கள் பற்றி
   (2) சிறுபிள்ளைகளின் அழகு பற்றி
   (3) காற்றில் பூக்கள் அசையும் விதம் பற்றி


8. இக்கவிதையில் 'எழுத்தறியச் செல்லும்' என்பதன் கருத்து யாது?
   (1) கற்கச் செல்லும் (2) நூலகத்திற்கு செல்லும் (3) நிரையாகச் செல்லும்

- சரியான விடையைத் தெரிவு செய்க.

9. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழியின் கருத்து
   (1) ஒற்றுமையே பலம். (2) விடாமுயற்சி பலன் தரும்.
   (3) பலசாலியும் தோல்வி அடையலாம்.

10. 'மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்' என்ற கருத்தைத் தரும் பழமொழி
    (1) பொறுத்தார் பூமியாள்வார். (2) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.
    (3) பேராசை பெருந் தரித்திரம்.

11. ஒரு கடிதத்தை எழுதித் தபாலில் இடுதல் தொடர்பான சில செயற்பாடுகள் உருக்களில் காணப்படுகின்றன. அச்செயற்பாடுகள் நடைபெறும் ஒழுங்கிற்கு ஏற்ப உருக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.





(1) ABDCEF (2) ABCDEF (3) ACBEDF


12. இக்கலந்துரையாடலை வாசித்து, அதன் படிமுறைகள் சரியான ஒழுங்கில் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
    A - ஆ! மிகவும் அழகான சட்டை
    B - ஆம். எனக்கு மிகவும் விருப்பம்.
    C - உண்மையா! இது புதியது ஒன்று அல்ல.
    D - நீர் இதனை விரும்புகிறீரா?
    E - ஆனாலும் இது மிகவும் அழகானது.

(1) ACEDB (2) ADBCE (3) ABDFC

- எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


13. 



(1) 8 (2) 4 (3) 12

14. 


(1) 1 (2) 2 (3) 5


- கோலத்திற்கேற்ப அடுத்தாக வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

15. 



(1) (2) (3)


16. 


(1) (2) (3)

- ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

17. உரு 1 இல் உள்ள வட்டக் கடதாசியை உரு 2 இல் உள்ளவாறு நான்காக மடித்து உரு 3 இல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து, மீதிப் பகுதியை விரிக்கும்போது கிடைக்கும் வடிவம் யாது?




உரு 1 உரு 2 உரு 3



(1) (2) (3)

more Past papers
at www.Edukinniya.lk



18. உருவில் உள்ள கூம்பகத்தின் மேற்பகுதியிலிருந்து அதே வடிவம் உள்ள ஒரு சிறிய கூம்பகத்தை வெட்டி நீக்கும்போது எஞ்சியிருக்கும் பகுதியில் எத்தனை முகங்கள் இருக்கும்?
   (1) 6 (2) 5 (3) 4

19. நிமலன் திங்கட்கிழமையிலும் பார்க்க ரூ.10 குறைவாகச் செவ்வாய்க்கிழமையிலும் செவ்வாய்க்கிழமையிலும் பார்க்க ரூ.5 குறைவாகப் புதன்கிழமையிலும் செலவு செய்தான். அவன் செவ்வாய்க்கிழமை ரூ.30 ஐச் செலவு செய்தால், மூன்று நாட்களிலும் செலவு செய்த மொத்தப் பணம்
   (1) ரூ.75 (2) ரூ.90 (3) ரூ.95

20. ஒரு கயிறு இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 1 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம்
   (1) 8 மீற்றர் (2) 5 மீற்றர் (3) 4 மீற்றர்


- அடைப்புகளில் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப

21. எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
   (1) 9 (2) 10 (3) 11

22. எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
   (1) 12 (2) 11 (3) 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3 | 4 | | A |
| 1 | 2 | | 5 | 8 | |
| 6 | | | | | 12 |
| 7 | | 9 | 10 | | B |

- தரப்பட்டுள்ள உருவில் சங்கீதத்தை விரும்பும் பிள்ளைகள் செவ்வகத்தினாலும் சித்திரத்தை விரும்பும் பிள்ளைகள் முக்கோணியினாலும் நடனத்தை விரும்பும் பிள்ளைகள் சதுரத்தினாலும் காட்டப்பட்டுள்ளனர்.




23. சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய மூன்றையும் விரும்பும் பிள்ளை யார்?
    (1) ரவி (2) முரளி (3) உதயன்


24. சங்கீதம், சித்திரம் ஆகிய இரண்டையும் மாத்திரம் விரும்பும் பிள்ளைகள் யாவர்?
    (1) விஜயனும் கமலாவும்.
    (2) கீதாவும் சங்கரும்.
    (3) கமலா, கீதா, சங்கர் ஆகியோர்.

- ஆங்கில எழுத்துகளுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.


25. A - பையை எடுத்துக்கொண்டு B - ஆடையை அணிந்து C - தந்தை
    D - புறப்பட்டார் E - சைக்கிளில்
    (1) ABCED (2) CBAED (3) CBDAE

26. A - அக்கா B - தம்பிக்கு C - தங்கைக்கு
    D - பாவாடையையும் E - காற்சட்டையையும் F - வாங்கினார்
    (1) ABDCEF (2) ABEDCF (3) ABECDF

- உருவைப் பார்த்துச் சரியான விடையைத் தெரிவு செய்க.



27. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவத்தின்
    (1) ¼ இலும் குறைவாகும்.
    (2) ¼ இற்குச் சமம்
    (3) ¼ இலும் கூடியதாகும்.



28. முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
    (1) இரு மடங்காகும்.
    (2) மூன்று மடங்காகும்.
    (3) நான்கு மடங்காகும்.

- ரூ. 453.18 ஐக் குறியீடுகளில் R. CFD.BG எனக் காட்டலாம் எனின்,

29. ரூ. 1853.34 ஐ எவ்வாறு காட்டலாம்?
    (1) R.AHEC.CD (2) R.BGFD.DC (3) R.BGFD.BG

30. R.ABCD.EF இனால் காட்டப்படுவது யாது?
    (1) ரூ. 1234.56 (2) ரூ. 2134.65 (3) ரூ. 2143.65

- தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

31. (1) அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது காகம் பார்த்தது.
    (2) ஒரு மரத்தின் கிளை மீது இருந்த காகம் அங்குமிங்கும் பார்த்தது.
    (3) அங்குமிங்கும் இருந்த காகம் ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

32. (1) பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்து கொள்ள வேண்டும்.
    (2) எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ள வேண்டும்.
    (3) பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

- ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

33. சம கனவளவுகளைக் கொண்ட பால் உள்ள குவளையையும் நீர் உள்ள குவளையையும் எடுத்து, பால் குவளையிலிருந்து 10 மில்லிலீற்றரை நீர்க் குவளைக்குள்ளே விட்டுக் கலக்கி, அக்கலவையிலிருந்து 10 மில்லிலீற்றர் மறுபடியும் பாற் குவளைக்குள் இடப்பட்டது. இப்போது குவளையில் இருக்கும்
    (1) பாலில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.
    (2) நீரில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.
    (3) பாலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

34. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.
    (1) 3446758 - 3447658
    (2) NMWAY - MNWAY
    (3) 3Y 2ƐRЯ - 3YƐ2ЯR

www.Edukinniya.lk

35. ஓர் ஓட்டப் போட்டியில் 5 பிள்ளைகள் போட்டியை முடித்த விதம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| குமார் | - | 5 நிமிடம் |
| மோகன் | - | 8 நிமிடம் |
| பிரசாந்தன் | - | போட்டியை முடிக்கவில்லை |
| சந்திரன் | - | 4 நிமிடம் |
| சேகர் | - | 6 நிமிடம் |

அவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை யாது?
    (1) சந்திரன், குமார், சேகர், மோகன்
    (2) மோகன், சேகர், குமார், சந்திரன்
    (3) சந்திரன், பிரசாந்தன், குமார், மோகன்

* * * *


36. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கிலோமீற்றர் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 60 கிலோமீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கிலோமீற்றர் செல்லும்


(1) 60 (2) 40 (3) 30

37. ஒரு நகரத்தை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்கு 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கின்றன. நகரத்தின் அபிவிருத்தி பணி 2010 ஆம் ஆண்டு யனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

(1) 2014 (2) 2013 (3) 2012

38. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவத்தின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள உருவைத் தெரிவு செய்க.







(1) (2) (3)


- ஒவ்வொரு கோலத்திற்கேற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.


more Past papers
at www.Edukinniya.lk

39.  ............



(1) (2) (3)

40.  ............


(1) (2) (3)

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2010 ஓகஸ்ட்

வினாத்தாள் **II** 1 மணித்தியாலம் 15 நிமிடம்

1. பின்வரும் பாடல்களை வாசிக்க.

எண்ணிய முடிதல் வேண்டும்;
    நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
    தெளிந்த நல்லறிவு வேண்டும்;

பண்ணிய பாவ மெல்லாம்
    பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
    நசித்திடல் வேண்டும் அன்னாய்

- சுப்பிரமணிய பாரதியார் -

மேற்குறித்த இரு பாடல்களையும் பயன்படுத்தி (i) தொடக்கம் (vi) வரை வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பாரதியார் இங்கு யாரிடம் வேண்டுதல் செய்கின்றார்? ..........................................................................

(ii) இங்கு 'சூரியன்' என்ற கருத்தை தரும் பெயர்ச்சொல்லை எழுதுக.

(iii) 'நினைத்தல்' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(iv) 'புண்ணியம்' என்ற சொல்லுக்குரிய எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(v) 'பாவம்' என்பதற்கு உவமானமாகக் கூறப்படும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(vi) பாரதியாரின் வேண்டுதல்கள் இரண்டினை எழுதுக.

(அ) ..........................................................................

(ஆ) ..........................................................................

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் ✓ அடையாளத்தையும் பிழையாயின் × அடையாளத்தையும் எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுக.

(i) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளது.

(ii) மான் கூட்டம் சிதறி ஓடியது.

(iii) ஒவ்வொரு புத்தகமும் நல்லது.

(iv) தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை.

www.Edukinniya.lk

3. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) (1) முயர்ச்சி (2) முயச்சி (3) முயற்சி (4) முய[illegible]

(ii) (2) தொழிலாழி (2) தொளிலாளி (3) தொழிலாளி (4) தொளிலாழி

4. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) கண்வளர்தல் ..........................................................................

(ii) கைகொடுத்தல் ..........................................................................


* * * * *

5. சேவல், மைனா என்ற இரு சொற்களிலும் சே, மை என்னும் எழுத்துகளில் இடப்பட்டுள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) 'ே' (ஒற்றைக்கொம்பு - இரட்டைக்கொம்பு - சங்கிலிக்கொம்பு) : ..............................................................

(ii) 'ை' (ஒற்றைக்கொம்பு - இரட்டைக்கொம்பு - சங்கிலிக்கொம்பு) : ..............................................................

6. படத்தைப் பார்த்து அவை ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பெயரை ஆங்கிலத்திலேயே எழுதுக.

(i)  .............................................. (ii)  ..............................................

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் எழுதுக.

நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். ..............................................................................................................

8. கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Who is shouting? ..............................................................................

(ii) Silence please! ..............................................................................

(iii) Let's sing a song. ..............................................................................

9. (i) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

பிறந்த தின வாழ்த்துகள். ..............................................................................................................

(ii) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(அ) அபே பந்திய. ..............................................................................................

(ஆ) குருத்துமா எனவாத? ..............................................................................................

- **10** தொடக்கம் **39** வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

10. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
(1) கொன்றை (2) முள்முருக்கு (3) அலரி (4) ஆவரசு


11. நீர்வாழ் தாவரம்
(1) சீதேவியார் செங்கழுநீர் (2) ஊதுபூ
(3) பன்னம் (4) ஐதரில்லா

12. மாம்பழம், வேங்கை, தேங்காய் என்னும் வித்து வகைகள் பரம்பல் அடைவது முறையே
(1) காற்றின் மூலம், நீரின் மூலம், விலங்குகளின் மூலம்
(2) காற்றின் மூலம், விலங்குகளின் மூலம், நீரின் மூலம்
(3) நீரின் மூலம், காற்றின் மூலம், விலங்குகளின் மூலம்
(4) விலங்குகளின் மூலம், காற்றின் மூலம், நீரின் மூலம்

13. தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடுகளைச் செய்வது
(1) கொக்கு (2) காகம் (3) முசிறு (4) அணில்

14. இலங்கைக்கேயுரிய விலங்கினம்
(1) நீலப்புள் (2) மயில் (3) கிளி (4) காகம்

15. உருவில் காணப்படும் பறவையின் பெயர் யாது?



(1) மீன்கொத்தி
(2) குக்குறுவான்
(3) கானாங்கோழி
(4) கிளி


16. வத்தாளைக் கிழங்கில் அதிக அளவில் உள்ள போசணைப் பொருள்
(1) புரதம் (2) மாப்பொருள் (3) விற்றமின் (4) இலிப்பிட்டு

17. மணலின் கீழ் வைப்பதன் மூலம் நெடுங்காலத்திற்குப் பேணத்தக்க உணவு வகைகளுக்கு உதாரணம்
(1) எலுமிச்சம்பழம், மீன் (2) மாம்பழம், கிழங்கு
(3) வெங்காயம், ஈரப்பலா (4) எலுமிச்சம்பழம், பலாக்கொட்டை

18. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க பயிர்வகை
(1) மிளகாய் (2) பயறு
(3) கங்குன் (4) உருளைக்கிழங்கு

19. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
(1) மண்வெட்டி, முள்ளு, தூக்குக்குண்டு (2) துருத்தி, கலப்பை, குப்பைவாரி
(3) சீவுளி, மண்வெட்டி, சுத்தியல் (4) மண்வெட்டி, முள்ளு, குப்பைவாரி

20. இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?



(1) வட்டமாகச் செல்லல் என்பதாகும்.
(2) மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதாகும்.
(3) வலமாகத் திரும்ப வேண்டும் என்பதாகும்.
(4) கவனமாகக் கையாள வேண்டும் என்பதாகும்.


21. கொள்ளை நோய் பரவுவது
(1) நுளம்பின் மூலம் (2) எலியின் மூலம் (3) ஈயின் மூலம் (4) கோழியின் மூலம்

22. டெங்கு நோய் தொடர்பான பின்வரும் கூற்றுகளிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) எந்த நுளம்பினாலும் டெங்கு நோய் பரப்பப்படலாம்.
(2) டெங்கு நோய் பரவுதலைத் தடுக்கலாம்.
(3) டெங்கு நோயைக் குணப்படுத்தலாம்.
(4) டெங்கு நோய் காரணமாக இறப்பும் ஏற்படலாம்.

23. அசுத்தமான நீரைக் குடிக்கும்போது பீடிக்கத்தக்க நோய்
(1) மலேரியா (2) கயரோகம் (3) எலிக்காய்ச்சல் (4) மஞ்சட்காமாலை

24. பின்வரும் கூற்றுகளிடையே நீரைப் பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) நீருக்கு நிச்சயமான வடிவம் இல்லை.
(2) வெப்பமாக்கும்போது நீர் நீராவியாக மாறுகின்றது.
(3) வெப்பநிலை அதிகரிக்கும்போது சீனி நீரில் கரைதல் கடினமாகும்.
(4) கலக்கப்படும்போது சீனி நீரில் எளிதாகக் கரையும்.

www.Edukinniya.lk

25. 
ருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
(1) கலப்பை
(2) பெருங்கரடி
(3) வேட்டைக்காரன்
(4) தேள்

more Past papers
at www.Edukinniya.lk


26. தேசப்படத்தில் புகையிரதப் பாதைகள் காட்டப்படும் நியம நிறம்
(1) மஞ்சள் (2) நீலம் (3) கறுப்பு (4) கபிலம்

27. இழக்கப்பட்ட அடையாள அட்டை பற்றி அறிவித்தல், சைக்கிளுக்கான உத்தரவுச்சீட்டைப் பெறுதல், வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதியைப் பெறுதல் என்னும் அலுவல்களுக்காக செல்ல வேண்டிய இடங்கள் முறையே
(1) பிரதேசச் செயலகம், பொலிஸ், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்.
(2) பொலிஸ், பிரதேசச் செயலகம், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்.
(3) மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம், பிரதேசச் செயலகம், பொலிஸ்
(4) பொலிஸ், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம், பிரதேசச் செயலகம்

28. இலங்கைத் தேசிய கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது
(1) செம்மஞ்சள் நிறப் பகுதி (2) செந்நிறப் பகுதி
(3) பச்சை நிறப் பகுதி (4) மஞ்சள் நிறப்பகுதி


29. இலங்கை அரசாங்க இலச்சினையில் உள்ள நிறைகுடத்தினால் குறிப்பிடப்படுவது
(1) சௌபாக்கியம் (2) தன்னிறைவு
(3) தார்மீகம் (4) நிலைத்திருத்தல்

30. கலாவாவியைக் கட்டுவித்த அரசன்
(1) பண்டுகாபயன் (2) தாதுசேனன்
(3) மகாசேனன் (4) மகாபராக்கிரமபாகு


31. 
உருவில் காணப்படுவது
(1) யாப்பகூவாக் கோட்டை
(2) சிவனொளிபாதமலை
(3) சிகிரியா
(4) தலதாமாளிகை

32. பட்டடை பயன்படுத்தப்படுவது
(1) தச்சன் வேலைத்தலத்தில் (2) கொல்லன் கம்மாலையில்
(3) வயலில் (4) சுரங்கத்தில்

33. பின்வரும் எந்த ஒழுங்கமைப்பில் இரும்பாணியை நோக்கிக் குண்டூசி கூடுதலாக இழுக்கப்படும்.



(1) (2) (3) (4)

34. பின்வரும் உபகரணங்களில் குளிர்பானப் போத்தலைத் திறக்கப் பயன்படுத்தப்படுவது யாது?




(1) (2) (3) (4)

35. மின்குமிழை ஒளிரச் செய்வதற்காக A, B என்னும் இரு ஆணிகளையும் தொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டியது




(1) வாணிசுத் தாள் (2) ஈயத் தாள்
(3) திமைத் தாள் (4) ரிசுத் தாள்

36. உருவில் காணப்படுகின்றவாறு ஒளிரும் மெழுகுவர்த்திகள் நான்கினை வேறுபட்ட உயரங்களைக் கொண்ட நான்கு கண்ணாடிப் பாத்திரங்களினால் ஒரே தடவையில் மூடும்போது




A B C D

முதலில் அணையும் மெழுகுவர்த்தி யாது?
(1) A (2) B (3) C (4) D

37. பாம்பு கடித்தபோது உடனடியாக அளிக்கப்படும் முதலுதவி யாது?
(1) துப்புரவான காற்றோட்டம் கிடைக்குமாறு செய்தல்
(2) இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தல்
(3) கடித்த இடத்தைச் சவர்க்காரத்தினாலும் தண்ணீரினாலும் கழுவுதல்
(4) நோயாளியின் இரு பாதங்களையும் ஏறத்தாழ ஓர் அடிக்கு உயர்த்தி நீட்டி விடுதல்

38.



உருவில் காணப்படும் தையல் முறை யாது?
(1) கம்பளித் தையல்
(2) மீன்முள்ளுத் தையல்
(3) வெட்டுக்குத்துத் தையல்
(4) சங்கிலித் தையல்

39. எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாது?
(1) 10 (2) 12 (3) 14 (4) 16

40. எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.
4050, 4060, 4070, 4080, ..................., ...................

41. மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

$\frac{9}{10}$, $\frac{3}{4}$, 0.7, 0.9 ..........................................

42. ஒரு வகுப்பறையில் 2 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும் 3 கதிரைகள் வீதம் உள்ள 6 நிரைகளும் உள்ளன. அந்நிரைகளில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது? ..............................................

* * * * *

43. 2010 ஆம் ஆண்டில் 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு. மோகன், தமது 30 ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடினார்? ..................................

44. வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.

| நாணயத் தாள் வகை | நாணயத் தாள் எண்ணிக்கை | பணம் |
|---|---|---|
| ரூபா. 50 | 1 | ரூபா. 50 |
| ரூபா. 20 | .................. | ரூபா. ............ |
| ரூபா. 10 | .................. | ரூபா. ............ |
| மொத்தம் | 6 | ரூபா. 130 |

45. 600 இனிப்புகளில் 60 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாகப் பொதிசெய்யப்பட்டன.


(i) சிறிய பைக்கற்றுகளில் பொதி செய்யப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..................................

(ii) அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுகளைத் தயார்செய்யலாம்?

..................................

46. உருவில் காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்புக.



1 kg 750 g | 3 kg 250 g | .......... kg ............ g

47. 1500 ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900 ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900 ml நீரைக் கவனமாக ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?


48. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல்நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் இருந்தாள்.

(i) கீதா நூல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்? பிற்பகல் ..............................

(iii) அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

................ : .............. மணித்தியாலம்

49. ஒரு காணியில் $\frac{1}{2}$ இல் காய்கறிப் பயிர்களும் $\frac{1}{4}$ இல் பூச்செடிகளும் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்டுள்ள நிலத்தின் அளவு மொத்த காணியில் என்ன பகுதியாகும்? . ..............................

50. 

நவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாகக் ட்டுக.


more Past papers
at www.Edukinniya.lk

51. 100 cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15 cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5 cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

......................................cm


* * * * *

52. தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | சிலாபம் | 76 km |
| கொழும்பு | புத்தளம் | 142 km |
| புத்தளம் | அநுராதபுரம் | 72 km |
| சிலாபம் | அநுராதபுரம் | ......km |

53. உருவில் காணப்படும் A, B, C என்னும் ஒத்த மூன்று செவ்வகத் தாள்கள், A மீது B உம் B மீது C உம் இருக்கத் தக்கதாக ஒட்டப்பட்டு உரு D பெறப்பட்டுள்ளது.




(i) D யின் சுற்றளவு யாது? ........................................ சென்ரிமீற்றர்

(ii) D யின் பரப்பளவு யாது? ..................................சதுர சென்ரிமீற்றர்

54. எமது பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவடைந்தது. முதலாம் இடத்தை வென்ற இல்லத்தின் பெயர் கூறப்படும் வரைக்கும் நாம் எல்லோரும் பொறுமையின்றிக் காத்திருந்தோம்.

**"வள்ளுவர் வித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைத் தாமரை இல்லம் வென்றுள்ளது" என ஒலிபெருக்கியின் மூலம் அறிவிக்கப்பட்டது.**

நீர் முதலாம் இடத்தை வென்ற தாமரை இல்லத்தைச் சேர்ந்த மாணவன் / மாணவி ஆவீர். அவ்வேளையை நினைவில்கொண்டு ஆறு ஆக்கப்பூர்வமான வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்).

(i)

(ii)

(iii)

(iv)

(v)

(vi)

www.Edukinniya.lk